Tamil Nadu Electricity Board Engineers' Association
(Recognized in G.O. NO. 854 dated 6-4-1946)
Regn. No.217/94
'Electricity Avenue', 144, Anna Salai, Chennai - 600 002, Off: 044 - 2852 0731
Web : tnebengineers.in, email : tnebea@gmail.com, tnebengineers.com, Fax : 044 - 2851 7307

பெறுநர்

**மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள்,**
தமிழக அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை–600 009.

மடல் எண்: த.நா.மி.வா.பொ.க./பொ.செ/எண்.61/2014, நாள் 19.07.2014.

மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் அவர்களுக்கு,

வணக்கம்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா** அவர்களின் சீரிய தலைமையிலான தமிழக அரசு சென்னை மாநகரில் **தடையில்லா மின்சாரம்** வழங்கிட அரிய பல முயற்சிகள் எடுத்து வருவதுடன் **68 துணை மின் நிலையங்களை** அமைத்திட விழைந்துள்ள நற்செய்தியினைத் தாங்கள் சட்டமன்றத்தில் 18.07.2014 அன்று அறிவித்தமையைப் பொறியாளர் கழகம் மனதாரப் பாராட்டி வரவேற்கிறது.

ஆனால் துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டிய நிலங்களைக் கையகப்படுத்துவதில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மிகுந்த சிரமமும் பலவிதமான தடைகளையும் சந்தித்து வருவதால் திட்டத்தைச் செயற்படுத்துவதில் மிகுந்த கால அவகாசம் தேவைப்படுகிறது.

மேலும் **வாரியம் உரிய விலை கொடுக்கத் தயாராக இருக்கும் நிலையிலும், அரசு நிலங்களை ஒதுக்கீடு பெறுவதிலும் கூட மிகுந்த காலதாமதம் ஆகிறது** என்பதனை தங்களின் மேலான பார்வைக்கு கொண்டுவர பொறியாளர் கழகம் விழைகிறது.

**Tamil Nadu Electricity Board Engineers' Association**
(Recognized in G.O. NO. 854 dated 6-4-1946)
Regn. No.217/94
'Electricity Avenue', 144, Anna Salai, Chennai - 600 002, Off: 044 - 2852 0731
Web : tnebengineers.in, email : tnebea@gmail.com, tnebengineers.com, Fax : 044 - 2851 73



**மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா** அவர்களின் பொற்கால ஆட்சியில் **தமிழ்நாட்டினை மின்மிகை மாநிலமாக** ஆக்குவதில் தாங்கள் எடுக்கும் பெருமுயற்சிகளுக்கு தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர் கழகம் என்றென்றும் துணை நிற்போம் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே இது போன்ற துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான இடங்களை எளிதில் கையகப்படுத்திடவும், விரைந்து திட்டங்களை செயல்படுத்திடவும் **குறிப்பிட்ட காலக்கெடுவினை (Time Frame) நிர்ணயித்து ஒரு சிறப்பு சட்டத்தின் மூலம் நிலங்களை பெறுவதற்கு** ஆவன செய்திட தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர் கழகம் கனிவுடன் வேண்டிக் கொள்கிறது.

நன்றி .

தங்கள் உண்மையுள்ள,

19/07/14

(சீனி. சங்கர நாராயணன்),
பொதுச் செயலாளர்.